பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

28 03 2025 **FRIDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

- இந்தியாவிற்கு முதலிடம் என்பது நாட்டின் வெளியுறவுக் கொள்கையின் தாரக மந்திரம் என பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- மின்னணு உற்பத்தித்துறையில் கடந்த பத்தாண்டுகளில் 25 ஆயிரம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.
- கடுமையான பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட மியான்மர் மற்றும் தாய்லாந்திற்கு தேவையான உதவிகள் அளிக்கப்படும் என்று இந்தியா தெரிவித்துள்ளது.
- இலங்கை கடற்படையினரால் இந்திய மீனவர்கள் கைது செய்யப்படும் பிரச்சினை குறித்து அந்நாட்டு அதிகாரிகளுடன் தூதரக நிலையில் தொடர்ந்து பேசி வருவதாக வெளியுறவுத்துறை செயலர் திரு விக்ரம் மிஸ்ரி தெரிவித்துள்ளார்.
- சென்னை சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சரத் கமல் - **Snehit Suravajjula** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

*-- இனி விரிவான செய்திகள் --*

<<<<<<>>>>>

இந்தியாவிற்கு முதலிடம் என்பது நாட்டின் வெளியுறவுக் கொள்கையின் தாரக மந்திரம் என பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று தனியார் தொலைக்காட்சி ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் பேசிய அவர், பாதுகாப்பான எதிர்காலத்தை இந்தியாவிற்கு உருவாக்கித்தர இந்த மந்திரம் முக்கிய பங்காற்றுவதாக கூறினார்.

மற்ற நாடுகளோடு விலகி இருக்க வேண்டும் என்ற நிலை மாறி, தற்போது அனைத்து நாடுகளுடனும் நட்புறவையும், ஒத்துழைப்பையும் பராமரிக்க வேண்டும் என்ற நோக்கில் வெளியுறவுக்கொள்கை புதிய வடிவம் பெற்றுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

யதேச்ச அதிகார போக்கிற்கு முற்றுப்புள்ளி வைத்து மனித குலத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

சர்வதேச செலாவணி நிதியம் போன்ற அமைப்புகளில் இந்தியாவின் மதிப்பு உயர்ந்துள்ளதாக அவர் கூறினார்.

கடந்த பத்தாண்டுகளில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி இருமடங்காக உயர்ந்திருப்பதாகவும், 25 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் வறுமையின் பிடியில் இருந்து மீட்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்திய இளைஞர்கள் திறன் மிக்கவர்களாகவும், புத்தாக்க கண்டுபிடிப்புகளை உருவாக்குபவர்களாகவும் தற்போது வலிமைப்பெற்றுள்ளதாகவும் அவர் கூறினார்.

உலகளாவிய சவால்களை எதிர்கொள்வதற்கு அனைத்து நாடுகளும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

குறிப்பாக, எரிசக்தி ஆதாரங்களை பாதுகாப்பதற்கு உயர் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

சர்வதேச சூரியசக்தி கூட்டமைப்பு குறித்து குறிப்பிட்ட பிரதமர், நிலையான எரிசக்தியை பெறுவதற்கு சிறிய நாடுகளுக்கும் சூரிய சக்தி உதவிடுவதாக தெரிவித்தார்.

உலகின் தென்பகுதி நாடுகளின் தேவைகளை பூர்த்தி செய்வதிலும் பருவநிலை மாற்றங்களை எதிர்கொள்வதிலும் அனைத்து நாடுகளும் ஒத்துழைப்பு தர வேண்டும் என்றும் பிரதமர் திரு நரேந்திர மோடி கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>

மின்னணு உற்பத்தித்துறையில் கடந்த பத்தாண்டுகளில் 25 ஆயிரம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாக மத்திய மின்னணு தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், நடப்பு நிதியாண்டில் மின்னணு பொருட்களின் உற்பத்தி ஒரு லட்சத்து 90 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு அதிகரித்துள்ளதாக தெரிவித்தார்.

மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதி நடப்பாண்டில் ஆறு மடங்கு உயர்ந்திருப்பதாக திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

<<<<<<>>>>>

கடல்வழி சரக்கு பெட்டக போக்குவரத்திற்கான மசோதா இன்று மக்களவையில் நிறைவேறியது.

1925-ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சட்டத்திற்கு மாற்றாக இந்த புதிய மசோதா கொண்டுவரப்பட்டுள்ளது.

சரக்கு பெட்டகங்களை கையாளுவதற்கான விதிமுறைகள், பொறுப்புகள், பாதுகாப்பு நடைமுறைகள் ஆகியவை சட்டப்பூர்வமாக உறுதி செய்வதற்கு இம்மசோதா வகை செய்கிறது.

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சரக்கு பெட்டகங்களுக்கான ஆவணங்களை கையாளுவதற்கான விதிமுறைகளும் இதில் கொண்டுவரப்பட்டுள்ளது.

சரக்கு பெட்டகத்தில் உள்ள பொருட்கள் அளவு மற்றும் அதன் தன்மை உள்ளிட்ட விவரங்களை போக்குவரத்து ரசீதுகளில் பதிவு செய்யப்பட வேண்டும் என்பதை அம்மசோதா உறுதி செய்கிறது.

முன்னதாக, இம்மசோதா மீது நடைபெற்ற விவாதத்திற்கு பதிலளித்து பேசிய மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால், சரக்கு போக்குவரத்தை எளிமைப்படுத்தும் வகையில், எளிய மொழி நடையில் மாற்றங்கள் செய்வதற்கு இந்த புதிய மசோதா வகை செய்வதாக குறிப்பிட்டார்.

ஏற்கனவே நடைமுறையில் உள்ள 1925-ஆம் ஆண்டு சரக்கு பெட்டக சட்டத்தில் உள்ள நடைமுறைகளுக்கு பாதிப்பு ஏதும் ஏற்படாத வகையில், புதிய சட்டம் எளிமைப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

சரக்குகளை ஏற்றிச்செல்லும் கப்பல் நிறுவனத்திற்கும், பெட்டக உரிமையாளர்களுக்கும் இடையே சமநிலையை இந்த புதிய மசோதா ஏற்படுத்துவதாக குறிப்பிட்டார்.

இதனால், இருதரப்புக்கும் இடையே பிரச்சினைகள் எழுவது தவிர்க்கப்படும் என்றும் அவர் கூறினார்.

மேலும், பாதுகாப்பான முறையில் சரக்குகளை பெட்டகங்களில் கையாளுவதற்கும் இந்த புதிய மசோதா வகை செய்வதாக குறிப்பிட்டார்.

உலகத்தரத்திற்கு இணையாக இந்திய கடல்சார் வர்த்தகத்தை இம்மசோதா உறுதி செய்வதாக குறிப்பிட்டார்.

சரக்கு போக்குவரத்தை வெளிப்படைத்தன்மையுடனும், எளிமையாகவும் கொண்டுவருவதற்கான நடைமுறைகளும் இதில் உள்ளதாக குறிப்பிட்டார்.

நாட்டின் கடல்சார் போக்குவரத்து கட்டமைப்புக்கு சரக்கு பெட்டக மசோதா புதிய உத்வேகத்தை அளிக்கும் என்றும் அவர் கூறினார்.

முன்னதாக, இம்மசோதா மீதான விவாதத்தில் பேசிய காங்கிரஸ் உறுப்பினர் திரு விஜய் வசந்த், சர்வதேச தரத்துக்கு இணையாக இந்திய கடல்சார் போக்குவரத்தை உறுதி செய்வதற்கு இந்த மசோதா உதவிடும் என்பதை வரவேற்பதாக தெரிவித்தார்.

மேலும், நவீன வர்த்தக போக்குவரத்து மாற்றங்களுக்கு ஏற்ப இந்த சட்டத்தை மேம்படுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஏற்றுமதியாளர்களுக்கு போதிய அளவு பாதுகாப்புக்கு இந்த புதிய மசோதா வழிவகுக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

**<<<<<<>>>>>**

மியான்மர் மற்றும் தாய்லாந்தில் அடுத்தடுத்து ஏற்பட்ட கடுமையான பூகம்பத்தால் பெரியஅளவில் சேதம் ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மியான்மரில் அடுத்தடுத்து 7 புள்ளி ஏழு மற்றும் ஆறு புள்ளி நான்கு என்ற ரிக்டர் அளவில் ஏற்பட்ட பூகம்பத்தால், பெரிய கட்டிடங்கள் இடிந்து விழுந்தன.

மியான்மரின் **Sagaing** பகுதியில் ஏற்பட்ட இந்த பூகம்பத்தால் கட்டிடங்கள் இடிந்து **‘Irrawaddy** ஆற்றில் விழுந்தன.

தாய்லாந்து தலைநகர் பாங்காக்கிலிருந்து தொள்ளாயிரம் கிலோமீட்டர் தொலைவில் ஏற்பட்ட கடுமையான நிலநடுக்கத்தின் காரணமாக மக்கள் வீடுகளிலிருந்து அலறி அடித்துக்கொண்டு வெளியேறினர்.

ஆற்றில் இருந்து பெருமளவு தண்ணீர் வெளியேறியதால், மக்கள் நீரில் மூழ்கியுள்ளனர்.

பாங்காக்கில் கட்டி முடிக்கப்படாமல் இருந்த கட்டிடங்களும் இடிந்து விழுந்ததாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த பூகம்பத்தால் ஏற்பட்டுள்ள உயிரிழப்பு மற்றும் பொருட்சேதம் குறித்து முழுமையான தகவல் இன்னும் கிடைக்கப்பெறவில்லை.

இதனிடையே, தாய்லாந்து பிரதமர் **'Paetongtarn '** அவசர கூட்டம் ஒன்றை நடத்தி பூகம்பத்தால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து ஆய்வு செய்தார்.

அந்நாட்டின் பேரிடர் மீட்புக்குழுவினரை பணிகளில் ஈடுபடுத்துவது குறித்தும் அவர் ஆய்வு செய்தார்.

இந்தியாவை பொறுத்தமட்டில் கொல்கத்தா மற்றும் இம்பால் நகரங்களில் லேசான நில அதிர்வு ஏற்பட்டது.

கொல்கத்தாவில் சில இடங்களில் நில அதிர்வு காரணமாக சுவர்கள் அசைந்ததை பார்க்க முடிந்ததாக மக்கள் தெரிவித்தனர்.

இதனிடையே, பிரதமர் திரு நரேந்திர மோடி, மியான்மர் மற்றும் தாய்லாந்தில் பூகம்பத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து கவலை தெரிவித்துள்ளார்.

மியான்மருக்கும், தாய்லாந்துக்கும் தேவையான அனைத்து உதவிகளையும் இந்தியா சார்பில் செய்துதரப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இருநாட்டு அரசுகளையும் தொடர்புகொண்டு, தேவையான உதவிகளை செய்துதருமாறு வெளியுறவுத்துறை அமைச்சகத்தை பிரதமர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதனையடுத்து, அந்நாடுகளில் உள்ள தூதரகங்கள் மூலமாக கண்காணிப்பை வெளியுறவுத்துறை அமைச்சகம் மேற்கொண்டுள்ளது.

தாய்லாந்து அதிகாரிகளிடம் இந்த சம்பவத்தில் இந்திய குடிமக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்களா என்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

தாய்லாந்தில் பாதிக்கப்பட்டுள்ள இந்தியர்கள் தொடர்புகொள்வதற்கு 66-6188-19218 என்ற அவசர தொலைபேசி எண் அறிவிக்கப்பட்டுள்ளது.

மியான்மரில் ஆறு பகுதிகளில் அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்நாட்டு பாதுகாப்புத்துறை அமைச்சர், கட்டிடங்கள் இடிந்து விழுந்ததில் 3 பேர் உயிரிழந்ததாகவும், 90 பேரை காணவில்லை என்றும் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

இலங்கை கடற்படையினரால் இந்திய மீனவர்கள் கைது செய்யப்படும் பிரச்சினை குறித்து அந்நாட்டு அதிகாரிகளுடன், அங்குள்ள இந்திய தூதரக அதிகாரிகள் தொடர்புகொண்டு பேசி வருவதாக வெளியுறவுத்துறை செயலர் திரு விக்ரம் மிஸ்ரி தெரிவித்துள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கொழும்பு மற்றும் யாழ்பாணத்தில் உள்ள தூதரக அதிகாரிகள் இப்பிரச்சினை குறித்து கண்காணித்து வருவதாகவும், இலங்கை அரசின் அனைத்து நிலைகளிலும் உள்ள அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வுகாண்பதற்கான முயற்சியை மேற்கொண்டிருப்பதாகவும் திரு விக்ரம் மிஸ்ரி கூறினார்.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

சென்னை சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சரத் கமல் - **Snehit Suravajjula** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 11-9, 9-11, 6-11, 11-8, 14-12 என்ற செட் கணக்கில் இந்தியாவின் **Manav Thakkar – Manush Shah** இணையை வென்றது.

----------------

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் சென்னையில் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்கவுள்ள பெங்களுரு அணிக்கு எதிரான ஆட்டத்தில் டாஸ் வென்ற சென்னை அணி முதலில் பந்து வீச தீரம்ானித்துள்ளது.

<<<<<<END>>>>>